DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

SC-439/2019

Deposition of witness for Prosecution / Defence / Court

Name : Mr. Patchayappan PW- 4

Father Name :

Adress :

Age/Sex :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of October 2022.

---

**முதல் விசாரணை:-**

நான் 17/8, அம்மனியம்மன் தோட்டம் 4-வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-81 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கட்டிடம் கட்டும் பணியில் சூப்பர் வைசராக கடந்த 2 0 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். கடந்த 31.07.2019-அன்று இரசு சுமார் 10 மணிக்கு வேலை முடித்து வீட்டிற்கு வந்தேன். மறுநாள் காலை எழுந்தவுடன் எனது வீட்டிற்கு எதிரில் வசிக்கும் ஸ்ரீதர் என்பவருக்கும் எனது பக்கத்து வீட்டில் வசிக்கும் ஆஜர் எதிரி வாசு என்பவருக்கும் முன்தினம் இரவு தகராறு நடந்ததாக எனது மனைவி குணசுந்தரி என்னிடம் தெரிவித்தார். பார்வை மகஜரில் காட்டப்படும் முதல் கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.2 ஆகும். போலீஸார் என்னிடம் ஒரு பேப்பரை காட்டினார்கள். அதை பார்த்துவிட்டு கையொப்பம் போட்டேன். பேப்பரில் என்ன இருந்தது என்று ஞாபகம் இல்லை. இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள். எதனால் தகராறு ஏற்பட்டது என்றால் கொடுக்கல் வாங்கலில் தகராறு ஏற்பட்டதாக போலீஸார் சொன்னார்கள்.

**<u>குறுக்கு விசாரனை:-</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி. எழுதாக வெற்றுத் தாளில் போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரி. தற்பொழுது என்னிடம் காட்டப்பட்ட கையொப்பம் உள்ள தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt. 20-10-2022. II Addl. District Judge.